JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Dw-1 Witness
for Prosecution

STC.No. 703/2022 Crime No. 120/2022 Station Bhavani

| Name | DW–1–சண்முகசுந்தரம் | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of December 2025 | | | |

**முதல் விசாரணை**

**எதிரி ஆஜர்**

நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணை மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். நான் தற்போது ஈரோடு, மாவட்ட குற்றப் பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறேன். 2011 ம் வருடம் நான் நில அபகரிப்பு தடுப்புப் பிரிவில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்தேன். 21.09.2011 ம் வருடம் பாட்டப்பன் கொடுத்த புகார் மீது நில அபகரிப்புத் தொடர்பாக நான் விசாரித்தேன். மேற்படி புகாரை CSR.905/ALGSC/E/2011 என்கின்ற எண்ணில் பதிவு செய்தேன். பாட்டப்பன் கொடுத்த புகாரின் மீது நான் பாட்டபனை 26.09.2011 ம் தேதியன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். . 26.11.2011 ம் தேதியன்று நான் குழந்தைவேல் என்பவரையும் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி புகாரை விசாரித்து நான் தரப்பினர்களுக்குள் சமாதானம் ஆகிவிட்டாதல் விசாரணை மேல் நடவடிக்கை எடுக்காமல் கைவிடப்பட்டது. நான் அதற்கு அறிக்கை தயார் செய்தேன். மேற்படி மனு இரசீது தொடர்பாக நான் பவானி தாலுக்கா, தாசில்தார் அவர்களுக்கு நிலத்தை அளந்து தரப் கோரி அறிவிப்பு 2023 ம் வருடம், 7 வது மாதத்தில் அனுப்பினேன். தற்போது புகார் கொடுத்து 12 வருடங்கள் ஆனதால் கோப்புகள் அனைத்தும் அழிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி எனது முதல் விசாரணைக்கும், தற்போது நடந்து வரும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சம்பந்தமும் இல்லை.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.12.09 08:22:19 +0530

**மறு விசாரணை இல்லை.**

STC.703/2022 வழக்கு கோப்புகளை நான் பார்க்கவில்லை என்றால், சரிதான். 14.12.2021 ம் தேதியில் எதிரி நேரில் சமர்ப்பித்த புகார் மற்றும் ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால், நான் அப்போது அங்கு பணியில் இல்லை, அதனால் நான் அந்த ஆவணத்தை பார்க்கவில்லை.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.12.09 08:22:30 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Dw-2 Witness
for Prosecution

STC.No. 703/2022 Crime No. 120/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | DW-2- விவேகானந்தன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of December 2025 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணை மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். நான் தற்போது ஈரோடு, மாவட்ட தலைமை கூடுதல் பொது காவல் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் கவுந்தப்பாடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியுள்ளேன். CSR.168/2013 சந்திரா என்பவரால் குழந்தைவேல் என்வருக்கு எதிராக கொடுக்கப்பட்டு, 07.09.2013 ம் தேதியன்று, உதவி ஆய்வாளர் சண்முகம் என்பவரால் விசாரணை செய்யப்பட்டது. மேற்படி மனுவானது சமரசம் செய்து முடிக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் CSR.163/2014 சந்திரா என்பவரால் சின்ன பாட்டப்பன், ராமசாமி மற்றும் குழந்தைவேல் ஆகியோருக்கு எதிராக கொடுக்கப்பட்டு, 25.07.2014 ம் தேதியன்று, 17.30 மணிக்கு, கவுந்தப்பாடி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு, பெண் காவல் உதவி ஆய்வாளர் திலகவதி என்பவரால் விசாரிக்கப்பட்டு, மனுவானது சமரசம் செய்து முடிக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் பாட்டப்பன் என்பவருடைய மனுவின் நகலில் 28.04.2012 என்ற தேதியில் பாட்டப்பன் கையொப்பம் செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் குழந்தைவேல் என்பவருடைய மனு நகலில் நிலப் பிரச்சனை தொடர்பாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அதில் குழந்தைவேல் என்பவர் கையொப்பம் செய்துள்ளார். கடந்த 06.05.2012 ம் தேதியன்று ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. கடந்த 12.09.2012 ம் தேதியன்று, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள இரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. அந்த சமயத்தில் நான் பணியில் இல்லை.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.12.09 08:22:39 +0530

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் On line complaint No.CCA.201402616 பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 31.07.2024 ம் தேதி முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். No.4701/2015/POL/ER என்ற மனு தொடர்பாக நான் விஜயகுமார் என்பவரை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி எனது முதல் விசாரணைக்கும், தற்போது நடந்து வரும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சம்பந்தம் இல்லை.

**மறு விசாரணை இல்லை**.

STC.703/2022 வழக்கு கோப்புகளை நான் பார்க்கவில்லை என்றால், சரிதான்.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.12.09 08:22:47 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.